தினகரன் கரூர்

29.11.2025 • Saturday • Trichy • Dinakaran 13

இந்த நாள்

- விசுவாவசு வருடம் கார்த்திகை மாதம் 13-ம் நாள். சனிக்கிழமை. வளர்பிறை.
- திதி: நவமி இரவு 11.15 மணி வரை; அதன் பிறகு தசமி.
- நட்சத்திரம்: பூரட்டாதி இரவு 2.22 மணி வரை; அதன் பிறகு உத்திரட்டாதி.
- யோகம்: மரண யோகம்
- நல்ல நேரம்: காலை 8.00 - 9.00 ; மாலை 4.45 - 5.45 வரை
- ராகு காலம்: காலை 9.00 - 10.30 மணி வரை.
- எமகண்டம்: மதியம் 1.30 3.00 வரை.
- சந்திராஷ்டமம்: ஆயில்யம், மகம்.
- சூலம்: கிழக்கு; பரிகாரம்: தயிர்.

வானிலை

இன்று		நாளை	
அதிகபட்சம்	குறைந்தபட்சம்	அதிகபட்சம்	குறைந்தபட்சம்
28C/82.4F	25C/77.0F	27C/80.6F	23C/73.4F

ஒரு சில இடங்களில் கன மழை பெய்யக்கூடும்

புகையிலை பொருட்களால் அதிகரிக்கும் புற்றுநோய் பக்கம் 14

கலைத்திருவிழா போட்டிகளில் அசத்திய பள்ளி மாணவர்கள் பக்கம் 16

மீன் பிடித்து மகிழும் இளைஞர்கள்

காவேரி ஆற்றங்கரையோரம் மனதிருப்திக்காக பிடித்த வேலையை செய்ய மீன் பிடித்து மகிழும் இளைஞர்கள்.

பாய் தயாரிப்புக்கு பணிக்காக

காவிரி ஆற்றங்கரை பகுதிகளில் கோரை புல் சாகுபடி

விவசாயிகள் ஆர்வம்

கரூர், நவ. 29: பாய் தயாரிப்புக்கு பணிக்காக காவிரி ஆற்றங்கரை பகுதிகளில் கோரை புல் சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கரூர் மாவட்டத்தில் தவிட்டுப்பாளையம், வாங்கல், சோமூர், ரெங்கநாதன் பேட்டை, புதுப்பாளையம், திருமுக்கூடலூர் ஆகிய பகுதிகள் காவிரி ஆற்றங்கரையோர பகுதிகளாக உள்ளன. மேலும், கரூர் நகரின் வழியாக பயணிக்கும் அமராவதி ஆறும் திருமுக்கூடலூரில் காவிரி ஆற்றில் கலந்து கொண்டு திருச்சி நோக்கி ஒரு மித்த காவிரியாக பயணிக்கிறது.

கரூர் மாவட்டத்தில் காவிரி ஆற்றங்கரையோர பகுதிகளில் பல ஆண்டுகளாக கோரை பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த கோரை பயிர் சாகுபடியில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் ஆண்டாண்டு காலமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த காவிரி ஆற்றங்கரையை ஒட்டி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் கோரை பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுக்கு இரண்டு முறை இந்த பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு முறை பயிரிடப்படும் கோரை ஆறு மாதங்களுக்கு பிறகு விவசாயிகளால் அறுவடை செய்யப்பட்டு வருகிறது.

ஆறு மாத விளைச்சலுக்கு பிறகு அதனை அறுத்து, கோரைகளை கைப்பிடியாக பிடித்து ஒரு கட்டு என்ற அடிப்படையில் வைக்கின்றனர். இதனைத் தொடர்ந்து, ஆறு கட்டுகளை ஒன்றாக இணைத்து பெரிய கட்டாக மாற்றி அதனை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பாய் தயாரிப்புக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பயிராக கோரை பயிர் உள்ளது. இதன் காரணமாக இதனை விளைவிக்கும் விவசாயிகளிடம் இருந்து மொத்தமாக வாங்கிச் செல்லும் வகையில் வியாபாரிகள் இந்த பகுதியில முகாமிட்டு மொத்தமாக விவசாயிகளிடம் வாங்கிச் செல்கின்றனர். மேலும், தற்போதைய நிலையில் பிற மாநிலங்களில் கோரைப் பயிர், சென்டரிங் தொழிலிலும் ஈடுபடுத்தி வருகின்றனர். இதன் காரணமாக இதன் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

ஒரு கட்டு கோரைப் பயிர் ரூ.1200 என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டு வந்தாலும், இதனை விளைவிக்க விவசாயிகள் அதிகளவு உழைப்பையும், செலவையும் விவசாயிகள் செலவிட்டு பின்னர் அறுவடை செய்கின்றனர். ஆனால், இவர்களின் உழைப்புக்கு ஏற்ற வகையில் விலை கிடைப்பதில்லை என்ற எதிர்பார்ப்பு நீண்ட காலமாக உள்ளது.

நம் முன்னோர்கள் காலம் காலமாக பயன்படுத்தி வந்த பாய் தயாரிப்புக்கு முக்கிய மூலப் பொருளாக விளங்கி வரும் இந்த பாய் தொழிலுக்கு தேவையான கோரை உற்பத்தியில் ஈடுபட்டு வரும் விவசாயிகளின் நலன் கருதி, இவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அரசுகள் செய்து தர வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் அனைவரும் உள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விசயத்தில கூடுதல் கவனம் செலுத்தி கோரை பயிர் சாகுபடியை மேலும் ஊக்குவிக்கும் வகையில் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என இந்த பகுதியினர் எதிர்பார்ப்பில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பைக்டாக்ஸியை ரத்து செய்யக் கோரி

ஆட்டோ ஓட்டுநர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்

அரவக்குறிச்சி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் முன்பாக பைக்-டாக்ஸியை ரத்து செய்யக் கோரி சிஐடியு ஆட்டோ ஓட்டுநர்கள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அரவக்குறிச்சி, நவ.29: பைக் டாக்ஸியை ரத்து செய்யக் கோரி ஆட்டோ ஓட்டுநர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரவக்குறிச்சி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் முன்பாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்டத் தலைவர் ரங்கராஜ் கலந்துகொண்டு தலைமை உரையாற்றினார். மேலும் ஆட்டோ தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் பைக்-டாக்ஸி முறையை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட நான்கு அம்சக் கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

ஆட்டோ ஓட்டுநர்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்கும் ரேபிடோ, ஊபர் போன்ற நிறுவனங்களின் பைக்-டாக்ஸிக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

கேரளா அரசைப் போல், ஆட்டோ மற்றும் இதர போக்குவரத்து வாகனங்களுக்காக அரசு சார்பில் ஒரு செயலியை உருவாக்க வேண்டும். ஆட்டோ மீட்டர் கட்டணத்தை தற்போதைய விலைவாசிக்கு ஏற்ப மாற்றியமைக்க வேண்டும்.

கட்டுமான வாரியம் போல, ஓட்டுநர்களுக்கு வீடு கட்டுவதற்காக அரசு ரூ.4 லட்சம் வழங்க வேண்டும் எனவும், மேலும் நான்கு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், சிஐடியு ஆட்டோ, டாக்ஸி, டெம்போ மற்றும் வேன் ஓட்டுனர்கள் சங்கத்தைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

பொதுமக்களை அச்சுறுத்திய பைக் ரைடர்ஸ் அபதாரம் விதித்த போலீசார்

கரூர், நவ. 29: சாலைகளில் அச்சுறுத்திய பைக் ரைடர்ஸ்க்கு டிராபிக் போலீசார் அபதாரம் விதித்தனர்.

கரூர் திருமாநிலையூர் அருகே மற்ற வாகன ஓட்டிகளை பீதிக்குள்ளாக்கும் வகையில் பைக்கை ஓட்டி நபருக்கு டிராபிக் போலீசார் அபராதம் விதித்து அறிவுரை வழங்கி அனுப்பி வைத்தனர்.

கரூர் திருச்சி சாலை திருமாநிலையூர் பகுதியில் இருந்து சுங்ககேட் செல்லும் சாலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு பைக்கை ஓட்டிச் சென்ற நபர் ஒருவர், பைக்கை அதிக வேகத்தில் ஓட்டியதோடு, பைக்கில் படுத்துக் கொண்டும், இரண்டு கால்களை பின்புறமாக வைத்துக் கொண்டும் மற்ற வாகன ஓட்டிகளையும் அச்சுறுத்தும் வகையில் வாகனத்தை ஓட்டியுள்ளார்.

இதனை அந்தப் பகுதியினர் தங்களின் செல்போனில் படம் பிடித்து சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளனர். இந்த காட்சிகள் வலைதளங்களில் வெளியிடப்பட்டு பல்வேறு தரப்பினர்களும் அதிர்ச்சியில் இருந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, இந்த சம்பவம் குறித்து கேட்டறிந்த பசுபதிபாளையம் போக்குவரத்து இன்ஸ்பெக்டர் நந்தகுமார் மற்றும் போலீசார், மக்களை பீதிக்குள்ளாக்கும் வகையில் வாகனத்தை ஓட்டிய நபரை கண்டுபிடித்து, சாலையில் மற்றவர்களை அச்சுறுத்தும் வகையில் வாகனம் ஓட்டியது, அலட்சியாக ஓட்டியது போன்ற பல்வேறு காரணங்களுக்காக ரூ. 4 ஆயிரம் அபராதம் விதித்து எச்சரித்தும், அறிவுரை வழங்கியும் ஹெல்மட் அணிந்துதான் வாகனத்தை ஓட்ட வேண்டும் எனவும் கூறி அனுப்பி வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ரூ.1.20 கோடி மதிப்பிலான கல்விக்கடன்

வேலாயுதம்பாளையம், நவ.29: சிறப்பு கல்விக்கடன் முகாமில் ரூ.1.20 கோடி மதிப்பிலான காசோலையை வழங்கினர்.

கரூர், எம். குமாரசாமி பொறியியல் கல்லூரியில் கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி இணைந்து நடத்திய மாபெரும் சிறப்பு கல்விக்கடன் முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த முகாமில் கரூர் மாவட்டச் சேர்ந்த பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டு கல்விக்கடன் பெறுவதற்கான நடைமுறைகள் குறித்த வங்கி அலுவலர்களிடம் கேட்டு அறிந்து கொண்டனர். மேலும் இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் விமல்ராஜ் கலந்து கொண்டு 20 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு சுமார் ரூ.1.20 கோடி கல்விக்கடனுக்கான ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் கல்லூரியின் தலைவர், ராம கிருஷ்ணன், இணைச் செயலாளர் சரண்குமார், நிர்வாக இயக்குநர் குப்புசாமி மற்றும் முதல்வர் முருகன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தனியார் வேலைவாய்ப்பு முகாம்களில்

4 ஆண்டுகளில் 6,657 இளைஞர்களுக்கு வேலை

- 1,868 நிறுவனங்களில் பணியில் சேர்ந்தனர்
- கலெக்டர் தங்கவேல் தகவல்

கரூர், நவ.29 : மாவட்டத்தில் நடைபெற்ற தனியார் வேலைவாய்ப்பு முகாம் மூலம் 4 ஆண்டுகளில் 6,657 இளைஞர்களுக்கு வேலை கிடைத்துள்ளதாக மாவட்ட கலெக்டர் தங்கவேல் தெரிவித்துள்ளார்.

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் குறித்து "நிறைந்தது மனம்" நிகழ்ச்சியில் கலெக்டர் தங்கவேல் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு அரசு 2030ம் ஆண்டுக்குள் மாநிலத்தின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் டாலராக மாற்ற இலக்கு நிர்ணயித்து செயல்பட்டு வருகிறது. இந்த இலக்கை அடைவதற்காக பல முக்கிய துறைகளில் கவனம் செலுத்தி அதற்கான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசு இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் தொழிலாளர் தொகுப்பில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்காக தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை மூலமாக மாவட்ட வாரியாக தொடர்ச்சியாக நடத்தப்படுகின்றன. இந்த முகாம்களின் நோக்கம் வேலை தேடும் இளைஞர்களுக்கு அவர்களுடைய திறமைக்கேற்ப தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளை வழங்குவதே ஆகும். பல்வேறு கல்வித் தகுதி உடையவர்களுக்கான (8-ஆம் வகுப்பு தேர்ச்சி முதல் இன்ஜினியரிங், பட்டப்படிப்பு வரை) வேலைவாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

> கடந்த 4 ஆண்டுகளில் 75 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 1,868 வேலையளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு 6,657 இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கரூர் மாவட்டத்தில் கடந்த 2021 முதல் 2025 வரை 4 ஆண்டுகளில் 10 மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களும் மற்றும் 65 சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களும் என மொத்தம் 75 வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் நடத்தப்பட்டு, 1,868 வேலையளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு 6,657 இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்தில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் தங்களுடைய சுய விவர குறிப்பு, உரிய கல்விச் சான்று, ஆதார் அட்டை ஆகியவற்றுடன் கலந்து கொள்ளலாம். இம்முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ள வேலையளிப்போர் மற்றும் வேலை தேடும் இளைஞர்கள் < www.tnprivatejobs.tn.gov.in > என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 04324-223555 மற்றும் 9499055912 என்ற எண்களில் தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு "நிறைந்தது மனம்" நிகழ்ச்சியின் மூலம் மாவட்ட கலெக்டர் தங்கவேல் தெரிவித்துள்ளார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ஜோதி உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், பி பில்டிங், கங்கா டீரூனோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலகு: 2 தளம், பி-பிளாக், எண்.5, ஆர்ஜே பிளாசா, காட்பாடி பிரதான சாலை, பாலாறு பாலம் அருகில், விருதம்பட்டு, வேலூர்-632006.

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 16.12.2025 நாளில் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (நி.வி.-ல் 10%) (F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த விக்கல்கள்/ நிதிச்சுமை வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
3.	கடன் எண். HL00597000000050035 47 லதா S (கடன்தாரர்), சங்கர் M (உப கடன்தாரர்)	கோரிக்கை அறிவிப்பு தேதி: 09.04.2025 மொத்த நிலுவைத் தொகை: 09.04.2025 தேதியில் செலுத்த வேண்டிய தொகை ரூ.4,08,622/- (ரூபாய் நான்கு லட்சத்து எட்டாயிரத்து அறுநூற்று இருபத்திரண்டு மட்டும்) மற்றும் அதனுடன் பணம் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான ஆண்டு ஒன்றுக்கு வட்டி 16.1% உட்பட.	கைபக	திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டம், லால்குடி வட்டம், புள்ளம்பாடி சார் பதிவு அலுவலகம், கன்னக்குடி கிராமம், நத்தம் மனைவாரி இணை பட்டா எண்.426, நத்தம் சர்வே எண்.671/12 இல் உள்ள 122 ச.மீட்டரில் உள்ள 61 ச.மீட்டர் பரப்பளவு உள்ள சொத்து, பின்வரும் நான்கெல்லைகளை உடையது. **வடக்கில்:** முத்துராஜ் வீடு, **தெற்கில்:** தெரு, **மேற்கில்:** தங்கராசு வீடு, **கிழக்கில்:** தெரு.	Rs. 575750/- (ரூபாய் ஐந்து லட்சத்து எழுபத்தைந்தாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்)	Rs. 57575/- (ரூபாய் ஐம்பத்தேழாயிரத்து ஐந்நூற்று எழுபத்தைந்து மட்டும்)	15.12.2025 மாலை 5.00 மணிக்கு முன்னதாக	10,000/-	10-12-2025 (11AM – 4PM)	16-12-2025 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் தரப்பு கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் இயங்குதளத்தில் தாமாகவே தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். மின்-ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா-122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள மின்-ஏலம் செயல்பாடு மீதான ஆள்மனை பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் - ஆக்சன் புரசீட்ல கணக்கில், ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code- ICIC0000915, ஜசிஐசிஐ பேங்க் லிமிடெட்பான்ஞ்சில் டெக்னிகல் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்-411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 15.12.2025 அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்-ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை பெறலாம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் சுய கையொப்பமிட்ட மூல பிரதியை கிங்க்ஸ்டோன் பார்க் கமர்சியல் காம்ப்ளெக்ஸ், எண்.19/1, பூதூர் நெடுஞ்சாலை, ராமலிங்க நகர், உறையூர், திருச்சி-620017என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும் கைபேசி எண். +91 9567626050, மின்னஞ்சல் முகவரி rahul.r1@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்-ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com- ஐ பார்வையிடவும். கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்-2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப - கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாள்கள் அறிவிப்பு என்று கருதத் தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்திதாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்திதாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 29.11.2025, இடம்: தமிழ்நாடு

ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

கனரா வங்கி (அரசுடமையாக்கப்பட்ட வங்கி) **Canara Bank** A Government of India Undertaking

தங்க நகை ஏல அறிவிப்பு

सिंडिकेट Syndicate

மண்டல அலுவலகம், திருச்சி.

திருச்சி மண்டலத்திற்கு உட்பட்ட திருச்சி, அரியலூர் மாவட்டங்களில் செயல்படும் கீழே பட்டியலிடப்பட்ட எங்களது வங்கி கிளைகளில் கீழ்கண்ட நபர்கள் பெற்ற தங்க நகை கடன் வாராக்கடன் ஆகிவிட்டபடியாலும் மேலும் ஒரு வருடத்திற்கு நாளது தேதி வரை மீட்கப்படாத நகைகளுக்கு பலமுறை தெரிவித்தும், கடிதம் மூலம் தெரிவித்தும் பதிவு தபால் மூலம் தெரிவித்தும் இதுவரை கடனை திரும்ப செலுத்தி நகைகளை மீட்டுக் கொள்ளவில்லை. இந்த அறிவிப்பு கண்டதும் கடன் பாக்கி தொகையையும், இதர செலவினங்களையும் செலுத்தி ஏலம் இடுவதற்கு முன்பு தங்களது நகைகளை மீட்டுக்கொள்ள வேண்டியது என்றும் தவறினால் கடனுக்கு அடமானம் வைக்கப்பட்ட நகைகளை **09.12.2025** அன்று மதியம் **12.00** மணிக்கு மேல் மாலை **3.00** மணிக்குள் மின் ஏலம் விடப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஏலத்தில் பங்கு பெற விரும்புபவர்கள் கீழே குறிப்பிட்டுள்ள அந்தந்த கிளைகளின் வங்கி கணக்கு எண்ணில் ஏல முன் வைப்புத் தொகை (EMD) ரூ. **25,000/-** வங்கி மேலாளரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அனுமதி பெற்றபின் செலுத்திட வேண்டும். ஏல நகைகளை பார்வையிட **05.12.2025, 06.12.2025 & 08.12.2025** மதியம் **2.30** மணிக்கு மேல் மாலை **5.00** மணிக்குள் அந்தந்த வங்கி கிளைகளில் அனுமதிக்கப்படுவர். நகைகடன் பெற்று இறந்த வாரிசுதாரர்களுக்கும் மற்றும் வெளியூர், வெளி மாநிலம், வெளிநாடு சென்றுள்ள இது சம்மந்தப்பட்ட கடன்தாரர்களுக்கும் பதிவு தபால்களை பெறாதவர்களுக்கும் இந்த அறிவிப்பு பொருந்தும். மேலும் கடன்தாரர்களுக்கு எந்த விதமான நோட்டீஸ் அல்லது முன்அறிவிப்பு இன்றி மேற்படி ஏலத்தினை ரத்து செய்யவோ, மாற்றி அமைக்கவோ வங்கி மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

(தவறுகள், விடுதல்கள் நீங்கலாக) **ஏலத்தொகை முன் வைப்புத் தேதி : 08.12.2025** **ஏலத்தேதி : 09.12.2025**

எண்	நகை கடன் எண்	கடன் தேதி	கடன்தாரர் பெயர் மற்றும் விலாசம்
			எருவங்குடி கிளை, செல் : 9489045724, வங்கி கணக்கு எண் : 209272434 - IFSC CODE : CNRB0001611
1.	1611842055483	30.03.2021	T.அன்பழகன், த/பெ. தங்கராசு, No. 159, கீழ தெரு, அய்யப்ப நாயக்கன் பேட்டை, வங்குடி, அரியலூர் - 612903
2.	180113766496	26.09.2022	சிவமணி ராமலிங்கம், த/பெ. ராமலிங்கம், No. 152/1, மாரியம்மன் கோவில் தெரு, ராதாபுரம், அரியலூர் - 621803
3.	180165139999	27.03.2023	சிவமணி ராமலிங்கம், த/பெ. ராமலிங்கம், No. 152/1, மாரியம்மன் கோவில் தெரு, ராதாபுரம், அரியலூர் - 621803
			ஜெயங்கொண்ட சோழபுரம் கிளை, செல் : 9489045731, வங்கி கணக்கு எண் : 209272434 - IFSC CODE : CNRB0000964
4.	164017523841	13.06.2024	K.அன்பழகன், த/பெ. குஞ்சிதபாதம், தெற்கு பிள்ளை தெரு, பிச்சானூர், அரியலூர் - 621 802
			கோடாலிகருப்பூர் கிளை, செல் : 9489045745, வங்கி கணக்கு எண் : 209272434 - IFSC CODE : CNRB0000900
5.	180403817146	17.04.2025	V.ரஞ்சனி, க/பெ. விஜயகுமார், No. 648, காலனி தெரு, கோடாலிகருப்பூர், அரியலூர் - 612902
			திருச்சி IT பார்க் கிளை, செல் : 9489045803, வங்கி கணக்கு எண் : 209272434 - IFSC CODE : CNRB0003440
6.	180114032890	27.09.2022	G.விஸ்வநாத், No. 1/350, பாரத் நகர், பூலாங்குடி காலனி, HAPP போஸ்ட், திருச்சி - 620025
7.	180114032963	27.09.2022	G.விஸ்வநாத், No. 1/350, பாரத் நகர், பூலாங்குடி காலனி, HAPP போஸ்ட், திருச்சி - 620025
8.	180163547819	20.03.2023	G.விஸ்வநாத், No. 1/350, பாரத் நகர், பூலாங்குடி காலனி, HAPP போஸ்ட், திருச்சி - 620025
9.	180116708661	07.10.2022	T.மணிமேகலை, M 293 Phase 2,, அண்ணா நகர், நவல்பட்டு, திருச்சி - 620026
10.	180150274056	06.02.2023	T.மணிமேகலை, M 293 Phase 2,, அண்ணா நகர், நவல்பட்டு, திருச்சி - 620026
			திருச்சி SR காலேஜ் கிளை, செல் : 9442203644, வங்கி கணக்கு எண் : 209272434 - IFSC CODE : CNRB0016365
11.	180110315314	14.09.2022	M.செல்வராணி, C, தூகன்தாசன், No. 23/1, பழனியாண்டி தெரு, நேருஜி நகர், அரியமங்கலம், திருச்சி - 620010
			திருச்சி சங்கிலியாண்டபுரம் கிளை, செல் : 9489001671, வங்கி கணக்கு எண் : 209272434 - IFSC CODE : CNRB0006256
12.	164023775923	08.07.2024	R.தாமோதரன், த/பெ. ராதாகிருஷ்ணன், No. 9-B, திருவி.க. தெரு, செந்தண்ணீர்புரம், திருச்சி - 620004.

மேலும் விபரங்களுக்கு அந்தந்த கிளை மேலாளரை தொடர்பு கொள்ளவும்.